# தமிழ்ப் பல்கலைக்கழகம்
**(தேசிய தரமதிப்பீட்டு குழுமத்தால் B+ தரச்சான்று பெற்றது)**
## தொலைநிலைக் கல்வி இயக்ககம்
## தஞ்சாவூர் - 613 010.
தொலைபேசி: 04362 227152, 227434
மின்னஞ்சல்: ddetu2006@gmail.com

முனைவர் ரெ. நீலகண்டன்
இயக்குநர்(பொ)

விகாரி, ஆனி 12
திருவள்ளுவராண்டு- 2050

ந.க. எண்:தொநிக1/6124/19, நாள்:26.06.2019

பெறுநர்
அனைத்து முதல்வர்கள்,
இணைந்த கல்லூரிகள்,
தமிழ்நாடு அரசு பல்கலைக்கழகங்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள்:தமிழ்ப் பல்கலைக்கழகம் - தொலைநிலைக் கல்வி இயக்ககம் - கற்றல் உதவி மையம் நிறுவுதல் - விருப்பம் தெரிவிக்கக் கோருதல் - தொடர்பாக

-------

தமிழின் தொன்மை, பண்பாடு, கலை, அறிவியல், சமூகம், சமயம், தத்துவம் ஆகியவற்றையும் கடந்த கால வரலாற்றையும் ஆய்வுகள் வழி முழுமையாக அறிந்து நிகழ்கால வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் மக்கள் ஏற்றம் பெறுவதற்கும் நமது தமிழ்மொழி உலகெங்கும் சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் மற்றொரு அங்கமாக 2006ஆம் ஆண்டில் தொலைநிலைக் கல்வி இயக்ககம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொலைநிலைக் கல்வி குழுமம்(DEB), புதுதில்லியால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டங்களைக் கிராமப்புற, நகர்புற மாணவர்கள் மற்றும் அலுவலகத்தில் பணிபுரிவோரின் கல்விக் கனவுகளை நனவாக்கும் கல்விச் சேவையை செய்து வருகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வழியாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6000 மாணவர்கள் சேர்க்கையுடன் **முதுநிலை, பட்டயம், சான்றிதழ், அறிமுகநிலைப் படிப்பு** போன்ற 64 பாடப்பிரிவுகளுடன் நடத்தப்பட்டு வருகின்றன, தொலைநிலைக் கல்விவழி வழங்கப்படும் பாடங்களுக்கான பாடத்திட்டங்கள் முறையான(Regular) பாடங்களுக்கு இணையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில், மாணவர்களுக்கு ஆண்டுக் கட்டணத்தைச் செலுத்துதல், நுழைவுச்சீட்டு பெறுதல். தேர்வு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் போன்றவைகளுக்கு இணையதள வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப்பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்விவழி பயின்ற மாணவர்கள் பல்வேறு அரசாங்க அலுவலகங்கள், முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழ் வழியில் பாடம் பயின்ற மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் 20% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இதன் தொடர்ச்சியாக தமிழகத்தின் எல்லைக்குட்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளைத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் கற்றல் உதவி மையங்களாக அங்கீகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை மற்றும் தொடர்பு வகுப்புகள் நடத்துவது இம்மையங்களின் பணியாகும். கற்றல் உதவி மையமாக செயல்பட விருப்பமுள்ளோர் இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பத்தினை நிறைவு செய்து தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் சமர்ப்பிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

தங்களின் ஏற்புக் கடிதத்தின் அடிப்படையில் கற்றல் உதவி மையத்திற்கான விதிமுறைகள் அனுப்பி வைக்கப்படும். மேலும் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் 04362 - 227152 / 227434 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர் (பொ)

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

(தேசிய தரமதிப்பீட்டு குழுமத்தால் B+ தரச்சான்று பெற்றது)

தொலைநிலைக்கல்வி இயக்ககம்

வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர் - 613010

தொலைபேசி - 04362 - 227152, 227434

Email: ddetu2006@gmail.com, Website : www.tamiluniversitydde.in


## தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் கற்றல் உதவி மையமாகச் செயல்படுவதற்கான ஒப்புதல் படிவம்

1. கல்லூரி / நிறுவனத்தின் பெயர் (முழு அஞ்சல் முகவரியுடன்) (இணைந்த/உதவி பெறும்/சுயநிதி)

**தொடர்பு எண்கள் (கட்டாயமாக):**

| **அலுவலகம்** | **தொடர்புடையவரின் விபரம்** |
|---|---|
| தொலைபேசி : | வீட்டுத் தொலைபேசி : |
| மின்னஞ்சல் : | கைபேசி : |

இணைவு பெற்றுள்ள பல்கலைக்கழகத்தின் பெயர் :

2. முதல்வர் பெயர் / கல்வித்தகுதியுடன் : முனைவர்/திரு/திருமதி.
3. முதல்வரின் முழு முகவரி தொடர்பு எண்ணுடன் :
4. கல்லூரி/நிறுவனம் வழங்கும் பாடப்பிரிவுகள் விவரம் / பாடவாரியான கல்வியாளர்கள் விவரம் பெயர், கல்வித்தகுதி மற்றும் அனுபவம் (இணைக்கவும்) :
5. கல்லூரி / நிறுவனத்தின் கட்டமைப்பு வசதிகள் உள்ளதா? :
   1. கணிப்பொறி ஆய்வுக்கூட எண்ணிக்கை
   2. வகுப்பறைகளின் எண்ணிக்கை
   3. நூலகம்
   4. சிற்றுண்டி வசதி
6. வேறு ஏதேனும் பல்கலைக்கழகத்தின் தொடர்பு வகுப்புகள் தங்கள் கல்லூரி / நிறுவனத்தில் நடத்தப்படுகிறதா? ஆம் எனில் விவரம் அளிக்கவும் :

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்கக கற்றல் உதவி மையமாக சேவை செய்ய எனது ஒப்புதலை அளிக்கிறேன்.

இடம்:

நாள்:

முதல்வர் கையொப்பம்

(முத்திரையுடன்)